# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணமலைபுரம், மதராஸ்-28.

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 25 | சார்வரி ஸ்ரீ மாசி மீ 1961 பிப்ரவரி மீ | பகுதி 11

## பொருளடக்கம்

பக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... 187

இதயத் துடிப்பூட்ட மின்சார சாதனம் ... 188

பூகோளப் பாடம்—" பூமாதேவி " ... 189

" கோஹினூர் " ... 191

சாரணர் இயக்கத்தின் கதை ... 194

1960-61-ல் தேசீய விருது பெற்ற திரு. எம். ஆர். கணபதி ... 195

S. I. T. U. Memorandum ... 196

செய்தித் திரட்டு ... 199

" வாழ்த்துமின் " ... 200

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

# எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

## 1—5-ம் வகுப்புகளுக்குரியவை

### பொங்கல் தமிழ் வாசகம்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (முதல் வகுப்பு) | 37 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 ,, |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 50 ,, |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 65 ,, |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 85 ,, |

### கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (முதல் வகுப்பு) | 40 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 ,, |

### லீலாவதி சுலப கணிதம்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 90 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | ரூ. 1 00 |

### நவீன சுலப கணிதம்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | ரூ. 1 25 |

### நவீன சமூக வரலாறு

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 45 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 75 ,, |

### புது முறை சமூக வரலாறு

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | ரூ. 1 12 |
| இரண்டாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | ரூ. 1 90 |

### நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 40 ,, |
| மூன்றும் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 80 ,, |

### கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 60 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 60 ,, |
| மூன்றும் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 60 ,, |

## பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1

# பாலர் கல்வி

தொகுதி 25 | சார்வரி ௵ மாசி மீ 1961 பிப்ரவரி மீ | பகுதி 11

## பத்திராதிபர் குறிப்புகள்

**வரவேற்கிறோம்**

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் மாதச் சம்பளம் மறுமாதம் முதல் தேதியே கிடைக்கும்படித் திட்டமிட்டு உத்திரவு செய்த நமது சர்க்காருடைய செய்கையை வரவேற்கிறோம். ஒவ்வொரு நிர்வாகத்தின் கீழ் வேலை செய்யும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் இம்மாதிரி சம்பளம் கிடைத்து விட்டால் ஆசிரியரின் இன்னல்கள் குறையுமென்பதில் சந்தேகமில்லை.

**குடியரசு தினம்**

வழக்கம்போல் இவ்வருடமும் ஜனவரி மாதம் 26-ம் தேதி பள்ளிக்குழந்தைகள் பங்கு கொண்டு ராஜ்யம் பூராவும் விழா கொண்டாடப் பட்டது. குடியரசு செழித்து ஓங்க, வருங்கால மக்களாகிய இக் குழந்தைகளைக் கவனித்துவரும் பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்ததே. அவ்வாசிரியர்களை மேன்மேலும் ஊக்குவிக்க சமூகம் கடமைப்பட்டது என்பதை மறுபடியும் ஞாபகப்படுத்துகிறோம்.

**தேசிய பரிசுபெற்ற ஆரம்ப ஆசிரியர்கள்**

சமீபத்தில் தேசியப்பரிசு (National Award) பெற்ற திரு. R. M. கணபதி அவர்களின் சேவையை இப் பத்திரிகையில் வேறொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். மற்ற இரு ஆசிரியர்களான திரு. R. கந்தசாமி, திரு. A. ஷெண்பக நாதன் அவர்களின் சேவை விவரம் அடுத்த பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**Standing National Commission**

தேசீயக் கல்வியை உருவாக்க இந்திய சர்க்கார் ஒரு கமிஷன் நியமிக்கத் திட்டமிட்டதை வரவேற்கிறோம். கல்வி தேசீயமயமாக்க வேண்டிய அவசியத்தைப் பன்முறை நாம் வலியுறுத்தி வந்திருக்கிறோம். இக் கமிஷன் மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அமுல் வருமாறு கல்வியை மாற்றியமைத்தல் அவசியமானது. தேசீயக் கல்வியே நம் நாட்டை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருமென்பதில் அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது. நாட்டிற்குத் தகுந்த கல்வித்திட்டம் என்ற தேவை இப்பொழுதாவது பூர்த்தியாகு மென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

**ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படை சம்பளம்**

நம் தேசம் பூராவும் எந்த ராஜ்யத்திலும், அலவன்சு தவிர ஐம்பது ரூபாயாவது ஆரம்ப ஆசிரியரின் அடிப்படை சம்பளமாக இருக்கவேண்டுமென திட்டக் கமிஷனைச் சேர்ந்தவர்கள் எண்ணுவது தெரிகிறது. விலைவாசிகள் ஐந்து மடங்கிற்குமேல் ஏறியிருக்கும் காலத்தில் மாதம் ரூபாய் நூறுவது அடிப்படைச் சம்பளமாக இருக்க வேண்டியது நியாயமில்லையா? ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்கள் நாட்டின் வளர்ச்சிக்காக செலவழிக்கப்படும் இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது நூறு ரூபாய் அடிப்படைச் சம்பளம் ஆரம்ப ஆசிரியருக்குக் கிடைக்காவிட்டால் வேறு எக் காலத்தில்தான் கிடைக்கும்? நாட்டின் வளர்ச்சிக்கான முதல் ஸ்தானம் பெற வேண்டிய கல்வி விஷயத்தில் இந்தச் செலவு தவிர்க்க முடியா தென்பதையும் நாட்டின் நலனை உத்தேசித்து மிகவும் அவசிய மென்றும் எடுத்துச் சொல்ல விரும்புகிறோம்.

### புதுச் சம்பளத் திட்டம்

இத் திட்டத்தின் சிபார்சுகள் அமுலுக்குக் கொண்டுவருவதில் ஏற்பட்ட பிரச்னைகளை ஆராய்ந்து, அவைகளுக்குத் தேவையான நிவாரணம் அளிக்கும் முறையையும் அவசரத்தையும் அவசியத்தையும் எடுத்துரைக்கும் யாதாஸ்து ஒன்று யூனியனுல் சர்க்காருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த யாதாஸ்து ஆங்கிலத்தில் இப்பத்திரிகையில் வேறு பக்கங்களில் அச்சிடப் பட்டிருக்கிறது. சர்க்கார் இப் பிரச்னைகளுக்குத் தெளிவானதாயும், ஆசிரியருக்கு ஆதரவளிக்கும் முறையிலும் உள்ள உத்திரவுகள் சீக்கிரத்திலேயே பிறப்பிப்பார்களென்ன ஆசிரியர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

### சம்பள உயர்வு

மூன்று வருட சர்வீசுக்கு ஒரு சம்பள உயர்வு என்ற விதியை ஆசிரியர்கள் விஷயத்தில் அமுல் நடத்துவதில் ஒருவித பிரச்னையும் எழ இடமில்லை. அப்படியிருந்தும் இது ஒரு பெரிய பிரச்னையாக்கப்பட்டு, சர்வீசான ஆசிரியர்களுக்கும் புதியதாய் வேலைக்கு வந்த ஆசிரியர்கட்கும் வித்தியாச மில்லாமல் செய்யும் வகையில் விதிகள் அர்த்தப்படுத்தப்படுவதாக நமக்குக் காகிதங்கள் வருகின்றன. ரூபாய் ஐந்துக்குக் குறையாமல் யாவருக்கும் ஒரு உயர்வு இருக்கவேண்டுமென்ற முறையும் அமுல் நடத்தப்படாததாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. உடனே சர்க்கார் தேவையான உத்திரவிட்டு ஆசிரியர்களுக்கு விதிகளின்படி சேரவேண்டிய ஊதியத்தைக் கொடுக்குமாறு செய்யும்படி வேண்டுகிறோம். ஏற்கனவே வேண்டிக் கொண்டபடி ஆசிரியரின் மொத்த சர்வீசின்படி சம்பள உயர்வு நிர்ணயம் (weightage) கணக்கிடும்படியான உத்திரவையும் பிறப்பிக்கும்படி வேண்டுகிறோம்.

### 1-6-1959 திட்டத்தினுல் பாதிக்கப்பட்டவர்கள்

1-6-1959-ல் சர்க்கார் கொண்டு வந்த திட்டத்தினுல் வேலையிழந்து சுமார் மூன்று மாத காலம் வரை வேலையில்லாமலிருந்த ஆசிரியர்களுக்கு, வேலையில்லாத காலத்திற்குச் சம்பளம் இதுவரை கொடுபடவில்லை. இவ்வாசிரியர்கள் கடனுக்குட்பட்டு சிரமப்படுவதை உத்தேசித்தும், வேலையில்லாமலிருந்து அவர்கள் குற்றமில்லாததாலும், சர்க்கார் திட்டத்தினுல் அவர்கள் வேலையில்லாமலிருக்க நேர்ந்ததாலும், திட்டம் வந்திராமலிருந்தால் அவர்களுடைய சம்பளம் சர்க்காரிடமிருந்து மானேஜ்மென்ட் மூல்யமாய் டீச்சிங் கிராண்டு தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்குமென்ற காரணத்தைக் கொண்டும், இச்சம்பளம் கொடுப்பதால், சர்க்கார் திட்டமிருந்த செலவுக்குப் புறம்பாக வேறு செலவு ஆகாதென்ற நியாயத்தைக் கொண்டும், இச்சம்பளம் உடனே இவ்வாசிரியர்களுக்குக் கொடுபடும்படி சர்க்கார் உத்திரவிடுவார்களென நம்புகிறோம்.

---

## இதயத் துடிப்பூட்ட மின்சார சாதனம்

இதய நோய்களால் வருந்துவோருக்கு உதவும் 'கார்டெயிக் பேஸ்மேக்கர்' என்றதோர் மின்சார சாதனத்தை பெர்மிங்காமிலுள்ள குவீன் எலிஸபத் ஆஸ்பத்திரியில் தயாரித்திருக்கிருர்கள். பலவீன இதயமுள்ளவர்களுக்கு சில சமயங்களில், திடீர்வலி அல்லது மாரடைப்பு தோன்றுவதால் மயக்கமேற்படும்; மரணமேற்படுவதுமுண்டு. இதயத்துடிப்பு சீராக இல்லாததால்தான் இம்மாதிரி ஆபத்து ஏற்படுகிறது. கார்டெயிக் பேஸ்மேக்கர் சீரான இதயத் துடிப்புக்கு துணைசெய்கிறது. இதில் சின்னஞ்சிறு டிரான்ஸிஸ்டர் ஜனரேட்டர் ஒன்று மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இதய தசைகளைத் தூண்ட மேற்தோலுக்கு அடியில் பொருத்தப்பட்ட சிறியதோர் சுருள்கம்பி, டிரான்ஸிஸ்டர் ஜனரேட்டரிலிருந்து ஆற்றலைப் பெற்று இயங்குகிறது. அது இயங்கும் போது இதயத்தசைகள் அசைகின்றன. இதயம் சீராக துடித்து செயலாற்றுகிறது.

பையில் போட்டுக்கொள்ளக் கூடிய இந்தச் சாதனத்தை ஜோஸப் லூகாஸ் லிமிடெட் என்ற பெர்மிங்காம் நிறுவனம் வியாபார ரீதியில் உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கிறது. இதை உபயோகித்து, பலர் பயனடைந்திருக்கிருர்கள்.

(B. I. S.)

# பூகோளப் பாடம்—"பூமாதேவி"

G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.

ராமன் சுறுசுறுப்பான பையன். வீட்டில் தாத்தாவிடம் ஏதாவது பேசிக்கொண்டேயிருப்பான். தாத்தா சொல்வதை நன்ருகக் கவனிப்பான். பல விஷயங்கள் தாத்தாவிடம் கற்றுக்கொள்வான். தாத்தாவோ தன் அனுபவத்திலிருந்து பல அரிய பெரிய விஷயங்களைக் குழந்தைக்கு ஏற்றவாறு கதை ரூபமாக எடுத்துச் சொல்லுவார். பள்ளியில் நடந்த பாடங்களைப் பற்றியும் விசாரிப்பார்.

ஒரு நாள் பள்ளியில் பூகோளப் பாடம் ஆரம்பித்ததாக ராமன் சொன்ஞன். உடனே தாத்தா "நான் பூகோளப் பாடம் சொல்வதைக் கேள்" என்று சொல்ல ஆரம்பித்தார்.

பூகோளம் என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா? கோளம் என்ருல் உருண்டை. பூமி உருண்டையாயிருக்கிறது என்பது பாடப் பெயரிலிருந்தே தெரிகிறது, பார்த்தாயா?

பூமி என்று ஏன் சொல்லுகிறேம், தெரியுமா? பூமி என்ருல் எல்லாவற்றையும் கொண்டது—எல்லாவற்றையும் உண்டுபண்ணக்கூடியது என்று அர்த்தம். பூமியில் எல்லாம் அடங்கியிருக்கிறது. அதிலிருந்துதான் நமக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கிறது. பூமி கொடுக்காவிட்டால் நாம் வாழ முடியாது.

சூரியன் இல்லாவிட்டால் வாழ முடியாது; காற்று இல்லாவிட்டால் வாழ முடியாது; (உஷ்ணம்) நெருப்பு இல்லாவிட்டால் வாழ முடியாது; தண்ணீர் இல்லாவிட்டால் வாழ முடியாது என்பதெல்லாம் பாடத்தில் போனவருடம் சொன்னதாகச் சொன்ஞ யல்லவா? பூமி கொடுக்காவிட்டால் என்ன ஆகும் தெரியுமா?

பூமி கொடுக்காவிட்டால் நம்மைச் சுற்றி ஒரு பொருளும் இருக்க முடியாது. நமக்கு ஒன்றும் கிடைக்காது. வீடு இருக்காது. உணவு இருக்காது. உடை இருக்காது.

உணவு பூமியிலிருந்து வருகிறது என்று உனக்குத் தெரியும். உடை பருத்தியிலிருந்து வருகிறது; பருத்தி பூமியிலிருந்து விளைகிறது என்றும் உனக்குத் தெரியும். மற்றதெல்லாம் அவ்வளவு யோசித்திருக்கமாட்டாய், நீ!

உன்னைச் சுற்றி எந்தப் பொருளையும் சொல். அது பூமியிலிருந்துதான் வந்திருக்கும். எந்த ஊருக்குப் போனுலும், எந்த இடத்திற்குப் போனுலும், ரயில், மோட்டார் இவைகளில் போனுலும், உன்னைச் சுற்றியுள்ள பொருளெல்லாம் பூமியிலிருந்து வந்ததாகவேயிருக்கும்.

நீ வீட்டில் இருக்கிருய். வீடு எப்படி வந்தது? செங்கல், கருங்கல், மண், சுண்ணும்பு, சிமெண்டு எல்லாம் எதிலிருந்து வந்தது? பூமி.

கதவு, ஜன்னல், அலமாரி இவைகளின் மரம், கம்பி எங்கிருந்து கிடைத்தது? பூமி.

பாத்திரங்கள் எங்கிருந்து வந்தன? பூமியிலிருந்து அகப்பட்ட உலோகத்திலிருந்து.

ரயிலில் போகிருய். ரயில் வண்டி, மரம், இரும்பு, கண்ணுடி இவைகளால் செய்யப்பட்டது. அவைகளெல்லாம் எங்கிருந்து கிடைத்தன? பூமியிலிருந்து.

மோட்டார் வண்டியைப் பார். இரும்புத் தகடு, ரப்பர் சக்கரம், யந்திரம் எல்லாம் பூமியிலிருந்து கிடைத்த பொருட்களினுல்தானே செய்தது!

வகுப்பு அறையைப் பார்த்திருக்கிருய். பெஞ்சு நாற்காலி, போர்டு, பென்சில், பேப்பர், புத்தகம் எல்லாம் பூமியிலிருந்து கிடைத்த மரம், மற்ற பொருள்களினுல் செய்ததுதானே!

உன்னைச் சுற்றியுள்ள பொருட்களில் பூமியிலிருந்து கிடைக்காத ஒன்றைச் சொல்ல முடியுமா? முடியவே முடியாது.

உணவு பூமியில் எப்படிப் போடப்பட்டிருக்கிறது, பார். மனிதன் வெகு

நாட்கள் நெல்லேயோ, அரிசியையோ சேகரித்து வைத்தால் புழுத்துப் போகி றது. காய்கறி சேர்த்துவைத்தால் அழு கிப் போகிறது. பழங்களும் அப்படியே. தான்யங்களும் கெட்டு விடுகின்றன. ஆனுல் பூமியில் உணவு கெட்டு விடாமல் எப்படி போடப்பட்டிருக்கிறது, பார். உணவு சத்தாகப் போடப்பட்டிருக்கிறது. ஒரு தான்யமோ, ஒரு விதையோ பூமி யில் போடப்பட்டால் ஆயிரம் தான்யங் களோ, காய்களோ, பழங்களோ உண் டாக்கக்கூடிய சத்து போடப்பட்டிருக் கிறது. இந்த சத்து புழுக்காது; கெடாது; அழுகாது. என்ன ஆச்சரியம், பார்த் தாயா!

இதைவிட ஆச்சரியம் பார்! எவ்வளவு வித சத்து போடப்பட்டிருக்கிறது, பார்! நம் வீட்டுத் தோட்டத்தைப் பார்த்தாயா? வாழை மரத்திற்கு வாழை சத்து பூமி யிலிருக்கிறது. அடுத்தாற் போலுள்ள தென்னே மரத்திற்குச் சர்க்கரை சத்து போய் இளநீர், தேங்காய் உண்டுபண்ணு கிறது. அடுத்த ரோஜா செடியில் ரோஜா வாசனே பூமியிலிருந்து போகிறது. மல்லி கைச் செடிக்கு அதே பூமி மல்லிகைப் பூ வாசனே கொடுக்கிறது.

மாங்காய்க்குப் புளிப்பும், பாகர்க் காய்க்குக் கசப்பும், அதே பூமி கொடுக் கிறது. மிளகாயின் காரமும் அதே பூமி கொடுக்கிறது.

உணவுக்கு வேண்டிய பொருள்களின் சத்து, உடைக்கு வேண்டிய பருத்தியின் சத்து, வீடு கட்ட வேண்டிய பொருள்கள், அலங்காரத்திற்கு வேண்டிய தங்கம், வெள்ளி, வைரம், வெளிச்சத்திற்கு வேண் டிய மண்ணெண்ணெய், எண்ணெய் வித்துக்களின் சத்து, ரயில், மோட்டார், வண்டி போன்ற வாகனம் செய்ய வேண் டியதற்குத் தேவையான சாமான்கள், நெருப்பிற்கு வேண்டிய விறகு, இவ்வள வையும் கொண்டது நமது பூமி.

**பூமியின் பெருமையே பெருமை**

எது வேண்டுமானுலும் பூமி கொடுக் கும். எவ்வளவுக்கெவ்வளவு பாடுபடு கிருேமோ, அவ்வளவுக்கவ்வளவு பூமி கொடுக்கும். கோடிக்கணக்கான மக் களுக்கு வேண்டிய தேவை பூமியிலடங்கி யிருக்கிறது. எவ்வளவு கோடிப் பேர் அதிகமாக வந்தாலும், பூமி, உணவு, உடை, தங்குமிடம், மற்ற எல்லா சௌக் கரியங்களேயும் கொடுக்கும். பூமியே எல் லோருக்கும் உணவளிக்கும் **தாய்.** ஆகையால்தான் **பூமாதேவி** என்று சொல்லுகிருேம்.

இதுதான் பூகோளம் படிப்பதற்கு முன் தெரிந்துகொள்ள வேண்டியது என்ருர் தாத்தா.

ராமனும் மிகச் சிரத்தையுடன் கேட்டு அவையெல்லாவற்றையும் தன் நண்பர் களுக்கு மறுநாள் சொல்லப்போவதாகக் குதித்தான்.

---

## பம்பரம் சுற்று

பம்பரம் சுற்றலாம், வா வா!
வேகமாக வீசிப் போட்டு,
சுருக்காகச் சுண்டி விடு!
அடுக்கு அடுக்காகக் கயிற்றைச்
சுற்றி விட்டு, நுனியை
விரல் இடுக்கில் பிடித்து வீசு!

ஜோராகச் சுற்றுகிறது பார்!
நாலு பம்பரம் சுற்றுகிறது.
ஒன்றுதான் ஒரே இடத்தில்
நின்று சுற்றுகிறது! ஆமாம்!
ஜோர்! ஜோர்! பலே ஜோர்!

**—வி. நடராஜன்**

# " கோஹினூர் "

V. R. SUBRAMANIAN,
(Headmaster, A. C. C. Factory Ele. School, Madukkarai)

## கர்னல் யுத்தம்—கி. பி. 1739 (ஹிஜிரி 1158)

**பாத்திரங்கள் :**

மகமது ஷா — டில்லி பாதுஷா
நாதர் ஷா — பாரசீக மன்னன்
மந்திரிகள், சிப்பாய்கள், சேவகர்கள்.

### காட்சி 1

(நாதர் ஷாவின் படைகள் மகமது ஷா படையைத் தாக்குதல். நாதர் ஷா வெற்றி பறை சாற்றுமுன்)

**மகமது ஷா :**—போதும், போதும்' நிறுத்துங்கள். (வெள்ளைக் கொடியை உயர்த்துகின்றனர். எதிரிகள் துப்பாக்கிகளை கீழே பிடிக்கின்றனர்). தோழர்களே! சிப்பாய்களே! வீரர்களே! இந்த இரண்டு மணி நேர யுத்தத்தில் நம் படையில் சுமார் பத்தாயிரம் வீர வாலிபர்கள் உயிரிழந்தனர். இரத்த வெள்ளம் ஆறு போல ஓடிக்கொண்டிருக்கிறது. இதைக் கண்டும் தொடர்ந்து போர் புரிவது அறிவீனம். மேலும் இங்கு போர் செய்யும் நம் இரு படைகளும் இஸ்லாமியர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சகோதரத்வம், சமாதானம் இஸ்லாமின் முக்கிய கொள்கைகள் என்பதை நீங்களும் அறிந்ததே. அதனுல் இப்போது எதிராகப் போர் செய்யும் எனது சகோதரர் நாதர் ஷாவைக் கண்டு, 'அல்லா' வின் பெயரால் இதை நிறுத்தி சமாதானம் செய்து கொள்ள விரும்புகிறேன்.

**சிப்பாய்கள் :**—மகமது ஷா, ஜின்தாபாத்!

### காட்சி 2

(கூடாரத்தில் நாதர் ஷா கட்டிலின் மீது உட்கார்ந்திருத்தல்)

**சிப்பாய் :**—(ஓடி வந்து) வெற்றி, வெற்றி நமக்கே கிடைத்தது. டில்லி பாதுஷா போரை நிறுத்தி, உம்மோடு சமாதானம் செய்து கொள்ள விரும்புகிருர்.

**நாதர் ஷா :**—அப்படியா! அவரை அரசருக்குரிய மரியாதையுடன் அழைத்து வா.

(மகமது ஷா வருகை. நாதர் ஷா எழுந்து அவரை மார்புடன் தழுவி அழைத்து வந்து இருவரும் உட்காருதல்)

**மகமது ஷா :**—'அல்லாகே நாம்பர்' உங்களிடம் சமாதானத்துக்காக நாம் வந்திருக்கிரேம். இவ்வாறு வந்திருப்பது உம்மோடு தொடர்ந்து போர் செய்ய முடியாததால் அல்ல; அல்லது உம்முடைய போர்த் திறமையைக் கண்டு பயந்துமல்ல. இஸ்லாமிய அரசர்களாகிய நாம், இவ்வாறு கோர யுத்தம் செய்வது நம்முடைய மதக்கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. மேலும், பிற்காலத்தில் இதனுல் நமக்கு முஸ்லீம் உலகத்தில் அபகீர்த்தி ஏற்படும் என்பதை முற்கூட்டி எண்ணியே சகோதர முஸ்லீம் உயிர்கள் அழிவதை நிறுத்தி, கௌரவமான சமாதானம் செய்து கொள்ள இங்கு வந்தேன். உமது அபிப்பிராயம் என்னவோ?

**நாதர் ஷா :**—பாய் மகமது ஷா, டீக்ஹை, சபாஷ், உங்கள் அபிப்பிராயத்தை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன். ஆனுல்.........ஒரே ஒரு நிபந்தனை—டில்லியின் மட்டற்ற செல்வத்தைக் கேள்விப்பட்டுத்தான் படையெடுத்து வந்தேன். அதனுல் டில்லியில் எனக்குப் பிரியமான எந்தப் பொருளையும் தடையின்றி எடுத்துக்கொண்டு போக அனுமதிக்க வேண்டும். மற்றபடி உம்முடைய நாட்டைக் கவர்ந்துகொள்ளும் எண்ணம் எனக்குச் சிறிதும் இல்லை. ஏனெனில், நீங்களும் ஒரு முஸ்லீம் அரசர்தானே!

**மகமது ஷா :**—சரி.

(மந்திரி ஒப்பந்தம் எழுதுதல். இரு அரசர்களும் கையெழுத்து செய்தல்)

**ஹிஜிரி 1158 ஷவ்வால் 13.**

**சமாதான உடன்படிக்கை**

டெல்லி அரசரான முகமது ஷாவும், பாரசீக அரசரான நாதர் ஷாவும் அல்லாவின் பெயரால் இன்று செய்து கொண்ட உடன்படிக்கை யாதெனில், (1) போரை உடனே நிறுத்தி விடவேண்டும். (2) நாதர் ஷா தனக்குப் பிரியமான எப்பொருளேயும் டில்லியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். (3) முகமது ஷா தனது நாட்டைத் தானே ஆண்டு கொள்ளலாம்.

இப்படிக்கு :

**நாதர் ஷா**, பாரசீக அரசர்.

**மகமது ஷா**, டெல்லி அரசர்.

## காட்சி 3

(உடன்படிக்கையை மீறி மகமது ஷா படையெடுத்தல்)

**சேவகன் :**—(நாதர் ஷாவிடம்) துரோகம், துரோகம்; மகமது ஷா படைகளும், டெல்லி ஜனங்களும் திடீரென நம் சேனே மீது பாய்ந்து படுகொலே செய்கின்றனர். தாங்கள் இறந்து விட்டதாகவும் வதந்தி கிளப்பிவிட்டனர்.

**நாதர் ஷா :**—ஆ! அப்படியா! என்னிடம் சமாதானத்திற்காக கெஞ்சியதெல்லாம் சூழ்ச்சிதானு! பழிக்குப் பழி—கூன்-கா-கூன் (ரத்தத்திற்கு ரத்தம்) மகமது ஷாவை உடனே கைது செய்யுங்கள். உடனே நம் படை முற்றிலும் தயாராக வேண்டும். இதோ நான் புறப்படுகிறேன். இந்த டெல்லி என்ன கதியாகிறது, பார். நாதர் ஷா யார் என்று தெரியாதுபோலும்; சலோ, ஜல்தி.

## காட்சி 4

(கைதியான மகமது ஷா, கையில் கோஹினூர் வைரத்துடன் நடந்து கொண்டு)

டெல்லியிலுள்ள எந்தப் பொருள் போனுலும்—ஏன்—என் உயிரே போனுலும் இந்தக் கோஹினூர் வைரத்தை மட்டும் நாதர் ஷா அடையவிடப்போவதில்லே. இதைப் போன்ற வைரம் உலகிலேயே கிடையாது. இது நம் நாட்டிலேயே கிடைத்தது. கோல்கொண்டா மன்னர்களிடமிருந்து மாளவம் சென்று அக்பரால் கைப்பற்றப்பட்டு பல ஆண்டுகள் மொகலாயர்களாகிய என் முன்னேர்கள் பெருமையுடன் அணிந்தது. இதை எங்கு ஒளிப்பது.........

(உக்காவில் போடப் போகும்போது மந்திரி வருதல்)

**மந்திரி :**—அரசே, என்ன செய்யப் போனீர்கள் ?

**மகமது ஷா :**—இந்தக் கோஹினூர் வைரத்தை ஒளித்து வைக்கப் போனேன். இதன் பெருமையும் இதை எப்படி பாதுகாத்து வருகிறேன் என்பதும் உங்களுக்குத் தெரியும் அல்லவா ?

**மந்திரி :**—(யோசித்து) உமது தொப்பியில் வைத்துக்கொண்டால் என்ன ? இஸ்லாம் வழக்கப்படி ஒருவர் தொப்பியை மற்றெருவர் பிடுங்கிக் கொள்வது தவறு அல்லவா ? அதனுல் அதுவே சிறந்த இடம் என நான் நினைக்கிறேன்.

**மகமது ஷா :**—நல்ல யோசனைதான். சரி, அப்படியே செய்கிறேன்.

**மந்திரி :**—நான் ஒரு முக்கியமான விஷயம் தங்களுக்குச் சொல்ல வந்தேன். நாதர் ஷாவின் அட்டூழியங்களேயும், படுகொலேயையும், கொள்ளேயையும் டெல்லி மக்களால் பொறுக்கவே முடியவில்லே. மிகுந்த அவஸ்தைப்படுகின்றனர். அதைத் தடுக்க வழி.........

**மகமது ஷா :**—ஹரே அல்லா, இவன் எதற்கும் அஞ்சுபவனுக இல்லேயே; பொருளாசை பிடித்த பேய் அல்லவா அவன். நீ அவனிடம் சென்று என் மயிலாசனத்தை வேண்டுமானுலும் கொடுத்து, இந்தப் படுகொலேயை நிறுத்தச் சொல்.

**மந்திரி :**—அச்சா, அப்படியே தெரிவிக்கிறேன்.

## காட்சி 5

(சிப்பாய்கள் கொள்ளேயடித்த பொருள்களே எல்லாம் மூட்டைகள் கட்டுவதைக் காண்கிருன் மன்னன்)

**நாதர் ஷா :**—அரண்மனே பொக்கிஷம் முழுவதும் காலி செய்தாய் விட்டதா ? கோஹினூர் வைரம் கிடைத்ததா ?

**சிப்பாய்கள் :**—இல்லே; அதைக் காணேமே!

**நாதர் ஷா :**—என்ன! இல்லையா? எங்கே இருக்கக்கூடும்!

**மகமது ஷாவின் மந்திரி :**—ஷாயின்ஷா! இந்தப் படுகொலையை இனியும் சகிக்க முடியாது. உமக்கு வேண்டுமானல் இந்த அரண்மனைச் செல்வம் அனைத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். மயிலாசனம் எடுத்துச் செல்வதானலும் சரியே. அநியாயமாய் கொலை புரிவதை நிறுத்தும்.

**நாதர் ஷா :**—மந்திரி, மயிலாசனம் மட்டும் போதாது. அந்தக் கோஹினூர் வைரம் எங்கே?

**மந்திரி :**—இப் படுகொலை வெறியை நிறுத்த அதுவே மருந்தானல், அதையும் நீர் அடைய வழி சொல்லுகிறேன். ஆனல் இவ்வாறு ரத்தத்தில் தோய்ந்த அவ்வைரம் யார் முடியில் ஏறினலும், அவர் ஆட்சி அழிவது திண்ணம். நீர் அதை அடைந்தாலும் உம் நாட்டில் அது நிலைத்து இருக்காது. அது மீண்டும் எங்கள் நாட்டையே வந்தடையும். இது உறுதி.

**நாதர் ஷா :**—அதைப்பற்றி எனக்கு இப்போது கவலை இல்லை. வைரம் கிடைக்க வழி என்ன?

**மந்திரி :**—மகமது ஷா அதைத் தன்து தொப்பியில் ஒளித்து வைத்திருக்கிருர். சமாதான அடையாளமாக ஒரு விருந்து வைத்து, அதன்முடிவில் உங்கள் தொப்பிகளை மாற்றிக் கொள்வதுதான் அதை அடைய ஒரே வழி. ஆனல் முன்கூறிய வார்த்தைகள் மட்டும் வீண் போகா.

### காட்சி 6

(பலமான ஓர் விருந்து நடைபெறுகிறது. அரசர்கள் இருவரும் எதிர்-எதிராக உட்கார்ந்து கொண்டிருக்கிருர்கள்)

**நாதர் ஷா :**—ஏகிபாத்ஹை. ஒரு விஷயம். எங்கள் தேச வழக்கட்படி இரு அர்சர்கள் விருந்துண்டு நண்பர்களாகப் பிரியும்போது தங்கள் தொப்பிகளை மாற்றிக்கொள்வது வழக்கம். அப்படியே இன்றும் இப்போது செய்வோம் என்ன, பாயி! மகமது ஷா, ஏ ஹை மேரா தாஜ், இதோ என் கிரீடம். லீஜியே துமாரா ராஜ், உம் ராஜ்யத்தை நீரே வைத்துக் கொள்ளும். (மகமது ஷாவின் கிரீடத்தைக் கேட்கும்போது, மகமது ஷா கை நடுங்க, கண்களில் நீர் ததும்ப, மனம் துடிக்க தான் ஒளித்த அவ்வைரத்துடன் தனது மணிமகுடத்தைக் கொடுக்கிருர். புன்சிரிப்புடன் நாதர் ஷா அதைப் பெற்று தன் தலையில் அணிகிருர்).

**நாதர் ஷா பண்டயினர் :**—நாதர் ஷாவுக்கு ஜே! ஜே! (என்று கோஷமிடுகின்றனர்).

---

## கோலி ஆடுவோம்

கோலி ஆடலாம் வா வா!
கோபுவும் கோண்டுவும்
சோமுவும் சுப்பனும் வா வா!
கண்ணடி கோலி பார்!
அண்ண வாங்கித் தந்தார்.
ஒண்ண இரண்டா எத்தனை?
ஆளுக்கொன்று, இந்தா!
ஒத்தைக் குழி ஆட்டம்!
எத்தனை நேரம் போதும்.
குறிபார்த்து அடி! கவனி!
தோத்து விட்டால் என்ன?
முட்டி தள்ளணும் தெரியுமா?
இல்லை, முட்டியில் அடி வாங்கு!
விரல் வீங்கி விடும்!
கோலி ஆட்டப் புலி யார்?
கோபால்தான் குறிதவருப் புலி!

—வி. நடராஜன்

# சாரணர் இயக்கத்தின் கதை

இங்கிலாந்தின் தென் பகுதியிலுள்ள பிரௌன்ஸீயில் 53 ஆண்டுகளுக்கு முன்பு சாரணர் இயக்கம் நிறுவப்பட்டது. இன்று உலகெங்கிலும் சுமார் 9,000,000 சாரணர்கள் தொண்டாற்றுகிருர்கள். பிரிட்டனில் மட்டும் 570,000 சாரணர்கள் உண்டு. நிற-இன வேற்றுமைகளையும் அரசியல் வேற்றுமைகளையும் ஒதுக்கிவிட்டு உலக சகோதரத்துவம் தழைக்க உழைப்பதே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம்.

சிறுவர்களுக்கு நீதியும் நெறியும் போதிக்க வேண்டும்; துணிவும் தன்னம்பிக்கையும் ஊட்ட வேண்டும் என்று லெப்டினன்ட் ஜனரல் ராபர்ட் பேடன்-பவல் கருதினர். தமது கருத்துக்களை இரு வாரங்களுக்கொரு முறை, சிறு பிரசுர மூலம் வெளியிடத் தொடங்கினர். பிரிட்டிஷ் சிறுவர்கள் அவற்றை ஆர்வத்துடன் படித்தார்கள். அவை கூறும் போதனைகளை ஏற்று நடக்கவும் தொடங்கினர்கள். தமது கருத்துக்களை ஏற்றுக்கொண்ட சிறுவர்களையும் இளைஞர்களையும் ஒன்று திரட்ட ஓர் இயக்கம் அவசியம் என்பதை திரு. பேடன்-பவல் வெகு விரைவில் உணர்ந்தார்.

இங்கிலாந்தின் தென் பகுதியிலுள்ள பிரௌன்ஸீ தீவில் சாரணர் இயக்கத்தின் முதல் முகாம் நடந்தது. சமுதாயத்தின் பல நிலைகளிலுள்ள 24 இளைஞர்கள் அந்த முகாமில் கலந்துகொண்டார்கள். தங்களுக்கும் பிறருக்கும் பயன் படக்கூடிய பல தொழில்களை கற்றுத் தரக்கூடிய பேடன்-பவலைச் சந்தித்து பல செய்திகளைத் தெரிந்துகொண்டதில் மகிழ்ச்சியடைந்தார்கள். ஓராண்டுக்குள் இயக்கம் பரவிவிட்டது. 1908-ஆம் ஆண்டில், பேடன்-பவல் எழுதிய சாரணர் இயக்கக் கட்டுரைகளை ஒன்று திரட்டி, ஆங்கிலத்திலும், வேறு நான்கு மொழிகளிலும், கையேடாக வெளியிடப்பட்டது. அந்த ஆண்டில் லண்டன் கிறிஸ்டல் பாலஸில் நடந்த அணிவகுப்பில் 11,000 சாரணர்கள் கலந்துகொண்டார்கள். இளைஞர்களுடைய உத்சாகத்தைக் கண்டு பேடன்-பவல் வியப்படைந்தார். ராணுவப் பணியிலிருந்து கொண்டு, இயக்க வளர்ச்சிக்கு உழைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

பேடன்-பவலுக்கு 1909-ஆம் ஆண்டில் வீரப் பதக்கம் வழங்கப்பட்டது. அவர் பால்மொரால் மாளிகையில் ஏழாம் எட்வர்டு மன்னரைப் பேட்டி கண்டபோது இயக்கத்தின் வளர்ச்சிக்கு உழைப்பதற்காக பதவியிலிருந்து விலக விரும்புவதாகத் தெரிவித்துக்கொண்டார்.

பிரிட்டனில் பிரபலமடைந்த சாரணர் இயக்கம் வெளிநாடுகளிலும் பரவிற்று. சிலி நாடு பிரிட்டனைப் பின்பற்றிற்று. அமெரிக்காவும் கனடாவும் சாரணர் இயக்கத்தில் அக்கறைகொண்டன. முதல் உலகப் போர் தொடங்கியதும் சாரணர்களில் ராணுவத்தில் சேர்ந்தார்கள். சிறுவர்களுக்கு வழிகாட்டக்கூடிய ஆசிரியர்கள் இல்லாமல், இயக்கம் நசித்துவிடும் என்று பலர் கருதினர்கள். ஆனால் 1920-இல் சாரணர் இயக்கம் வலிமை பெற்றுத் திகழ்ந்தது. அந்த ஆண்டில் லண்டனில் உலக சாரணர் மகாநாடு (ஜம்பூரி) கூடிற்று. 34 நாடுகளைச் சேர்ந்த 8000 சாரணர்கள் அதில் கலந்துகொண்டு, திரு. பேடன்-பவலை உலக சாரணர் முதல்வராக ஏற்றுக்கொண்டார்கள். சென்ற நாற்பதாண்டுகளில் பத்து ஜம்பூரிகள் நடந்திருக்கின்றன. சென்ற ஆண்டில் மணிலாவில் ஜம்பூரி நடந்தது.

சாரணர் இயக்கத்தில் சிறுவர்களைப் போல சிறுமிகளும் ஆர்வங்காட்டியதால் அவர்களுக்கென தனிப் படை ஒன்றை திரு. பேடன்-பவல் நிறுவினர். அந்தப் படைக்கான ஒழுங்கு முறை விதிகளையும் பயிற்சித் திட்டத்தையும் தயாரிக்கும் பொறுப்பை தமது சகோதரி எக்னெஸிடம் ஒப்படைத்தார். 1910-ஆம் ஆண்டில் பெண் சாரணர்கள் படை (கைட்ஸ்) நிறுவப்பட்டது. "கோர் ஆவ் கைட்ஸ் இன் இந்தியா" என்ற படையினர், எடுத்த காரியத்தை துணிவுடனும் திறமையாகவும் செய்து முடிப்பதில் புகழ்பெற்று விளங்கியதால், அவர்களுடைய பெயரையே பெண் சாரணர்களுக்கும் சூட்ட பேடன்-பவல் விரும்பினர். பிற்காலத்தில் பெண் சாரணர்கள் படையின் தலைமைப் பொறுப்பை, பேடன்-பவல் சீமாட்டி ஏற்றுக்கொண்டார். இன்று உலகின் பல பகுதிகளில் சுமார் 5,000,000 பெண் சாரணர்கள் தொண்டாற்றிக் கொண்டிருக்கிருர்கள். பிரிட்டனில் சுமார் 500,000 பெண் சாரணர்கள் தொண்டாற்றுகிருர்கள். —(B.I.S.)

# 1960-61-ல் தேசிய விருது பெற்ற
# திரு. ஆர். எம். கணபதி

இவர் 1 முதல் 8 வகுப்பு வரை குல சேகரன் பட்டினம் பண்டாரச்சிவன் செந்திலாறுமுகம் நினைவு உயர் ஆதாரப் பள்ளியிலும், நாலாவது பாரம் முதல் 6 வது பாரம் முடிய பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் பள்ளியிலும், ஆசிரியர் பயிற்சி பாளையங்கோட்டை பிஷப் சார்ஜன்ட் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும் படித்தவர். 1932 ஜனவரி முதல் 1933 ஜூன் வரை பயிற்சி பெருத ஆசிரியராகவும், 25-3-1935 முதல் தொடர்ச்சியாக இன்று வரை பயிற்சி பெற்ற ஆசிரியராகவும் குலசேகரன் பட்டினம் பண்டாரச்சிவன் செந்திலாறுமுகம் நினைவு ஆதாரப் பள்ளியில் பணியாற்றி வருகிருர்.

1940 ல் திருச்செந்தூர் தாலுகா ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் யூனியனை அரும்பாடுபட்டுத் தொடங்கி, அதன் முதல் செயலாளராக அமைந்து, இந்த 20 ஆண்டுகளும் தொடர்ச்சியாக அதன் செயலாளர், ஆடிட்டர், உப தலைவர் பதவியில் இருந்து நான்கு ஆண்டுகளாக இப்போது அதன் தலைவராக இருக்கிருர். 1940 முதலே திருநெல்வேலி ஜில்லா ஆசிரியர் கில்டிலும் அதன் மூலம் தென்னிந்திய ஆசிரியர் யூனியனிலும் தீவிர பங்கு கொண்டுள்ளார். 1959 மே மாதம் சேலத்தில் நடைபெற்ற சென்னை மாநிலக் கல்வி மகாநாட்டின் ஆரம்பக் கல்வி அரங்கிற்குத் தலைமை வகித்தார். 1948 முதல் தொடர்ச்சியாக குலசேகரன் பட்டினம் வட்டார ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக இருக்கிருர். 16-4-1959ல் நடைபெற்ற (உலகம் போற்றும் உத்தமர் நேருஜி அவர்கள் கலந்து கொண்டு பாராட்டிய) அடைக்கலாபுரம் பள்ளிச் சீரமைப்பு மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

பல கூட்டுறவு ஸ்தாபனங்களோடு தொடர்புடையவர். குலசேகரன்பட்டினம் கூட்டுறவு நகர பாங்கின் செயலாளர். திருச்செந்தூர் தாலுக்காவிற்கு கூட்டுறவு பொதுவர் (arbitrator).

ஆரம்ப ஆசிரியர்களின் நண்பர். ஆரம்ப ஆசிரியர்களின் உயர்வுக்குப் பாடுபடுவதே தன் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டவர்.

22-12-1960ல் புது டில்லி "விக்யான் பவனத்தில்" இந்திய ஜனுதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களின் திருக்கரத்தால், நாடு முழுவதிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 71 ஆசிரியர்களில் ஒருவராகவும் (38 ஆரம்பப் பள்ளி ஆசிரியர் 33 உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்), சென்னை மாநிலம் முழுவதிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு ஆசிரியர்களில் ஒருவராகவும் (3 ஆரம்பப் பள்ளி ஆசிரியர், ஒரு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்) "நல்லாசிரியர் தேசீய விருது" பெற்றவர். டில்லியிலிருந்து புறப்படுவதற்கு முன்தினம் சுமார் 150 ஆசிரியர்கள் கொண்ட சென்னைவாசி செக்கண்டரி பள்ளிக்கூடமும், குலசேகரன் பட்டினம் வந்ததும் P. S. M. பள்ளியிலும் பாராட்டுக் கூட்டங்கள் நடைபெற்றன.


**Whatever Books you require in**
**Tamil & English**
*Please send your library orders to*
**SELVI PATHIPPAHAM, KARAIKUDI-1**

**செல்வியின் புதிய நூல்கள்**

| | |
|---|---|
| **டாக்டர் வ. சுப. மாணிக்கம்** | ரூ. |
| இரட்டைக் காப்பியங்கள் (இரண்டாம் பதிப்பு) | 6–50 |
| கொடைவிளக்கு | 1–50 |
| தொல்காப்பியப் புதுமை | 2–50 |
| **இரா. சாரங்கபாணி** | |
| திருக்குறள் உரைவேற்றுமை— அறம் | 4–00 |
| ,, பொருட்பால் | 7–00 |
| **தமிழண்ணல்** | |
| காதல் வாழ்வு (நாட்டுப் பாடல்) | 2–25 |
| **நாக. முத்தையா** | |
| குழந்தைப் பாடல்கள் | 1–50 |
| **கல்வி கோபாலகிருஷ்ணன்** | |
| சூரப்புலி | 1–00 |
| **இராமசாமித் தேவர்** | |
| வேள் பாரி (வில்லுப் பாட்டு) | 0–50 |

**செல்வி பதிப்பகம் :: காரைக்குடி**

# THE SOUTH INDIA TEACHERS' UNION

*Detailed Memorandum submitted to the Secretary to the Government,* Ministry of Education, Government of Madras, by the South India Teachers' Union, with regard to the revised scales of salaries and allowances for Teachers in the State and *their implementation.*

The South India Teachers' Union, as approved by the Executive Board of the Union and suggested by the members of the Union from all over the State assembled at the Extra-ordinary Conference of the Union held at Tanjore on 30-12-1960, submits the following points in detail for favour of kind consideration and orders.

While thanking the Government for the revision of scales of salaries of teachers with effect from 1-6-1960, the Union wishes to point out that the *principle of Parity as among teachers* of the same qualifications serving under different Agencies needs to be extended in the matter of HOUSE-RENT ALLOWANCE, MEDICAL CONCESSIONS and TEMPORARY INCREASE IN PENSIONS, which would together cost not more than about *eleven to twelve lakhs of rupees a* year. The Union sincerely hopes that this demand for PARITY in respect of allowances would be granted in recognition of the fact that all teachers, irrespective of the Agencies under which they are employed, are rendering the same kind of service to the Nation.

## SCALES OF SALARIES

The following points with regard to the revised scales of salaries need urgent consideration :—

*Lower and Higher Grade Teachers* : The minimum salary of Rs. 100 accepted for a white-collared job is necessary in the case of these teachers, who mould the future citizens at the most impressionable age, and the rate of increment per year needs liberalisation to at least Rs. 3.

*Secondary Grade Teachers* : These teachers, though equipped with a training of a duration of two years *after a pass in the* S.S.L.C., *are treat*ed on a par with the ministerial service, for which the minimum qualification is a mere S.S.L.C. Teachers have to serve throughout on the same scale, while promotion to higher scales is possible in the case of members of the ministerial service. These *teachers handle classes to the end of* III Form, after which the B.T. grade teachers take charge. It is but right that these teachers and other teachers placed in this grade are placed at least on the scale of Rs. 125-5-175 with a selection grade for one-third of them reaching to Rs. 200. The adoption of *such a new scale would rectify* the anomaly of decreased rate of increment from Rs. 4 to Rs. 3 in the latter years of service in the case of these teachers.

*B.T. Grade Teachers* : While welcoming the protection given in the form of Personal Pay to such of those as may get less emoluments at any future point of time in the new scale, these teachers prefer to have option as in the case of Gazetted Officers—option to continue in the old scale till *it is advantageous to them.* Selection grade for one-third of the teachers rising up to Rs. 375 is highly necessary to benefit the seniors in service and the Assistant Headmasters.

*Language Pandits* : The insistence on service on 1-1-1948 takes away the benefit from many Language Pandits, especially the Hindi Pandits, on account of the introduction of Hindi comparatively very late in Higher Forms. The insistence on a work of

17 hours in Higher Forms practically nullifies the benefit of I grade and all Pandits with I grade qualifications in the post 1948 period need to be paid I grade salaries on the B.T. scale, irrespective of the classes or periods handled.

*Headmasters of High Schools*: The responsibilities of the Head of a High School are equally great in the case of all High Schools, irrespective of the Agency that may run the High School and irrespective of the strength of the High School. That is the reason why the Union has been insisting on the need for a uniform scale of salaries, with variations only in allowances based on the strength of the Institutions. The scale of Rs. 300-15-450 is needed in the case of all Headmasters with a Headmasters' allowance according to the strength of the institution.

*Headmasters of Elementary and Middle Schools*: The Headmaster's allowance in the case of all elementary schools inclusive of those run by Aided agencies, where the allowance in force in local board schools is payable, needs liberalisation to enable the Head of the Institution to maintain his status; and this allowance is very essential in the case of Headmasters of Middle Schools also.

*Physical Training Instructors*: The Physical Training Instructor of the Higher grade has one-year special training over and above the Secondary grade training and deserves the scale of Rs. 125-5-175 plus a decent allowance. The revised scale of Rs. 90-4-110-3-140 plus an allowance of Rs. 5 is very discouraging in their case and needs revision to at least the above limit. The qualifications expected, the nature of the work and the classes handled by them justify such a revision.

*Commercial Instructors*: These instructors work in upper forms and have to do extra hours of work. They were already drawing salaries on the scale of Rs. 60-4-100, for which the corresponding scale is Rs. 125-5-175. Hence, the Union appeals for the scale of Rs. 125-5-175 in respect of these Instructors.

*Engineering Instructors*: The difference in special pay as among Instructors of the same qualifications differing in experience needs removal, as the Senior Instructor must always draw a higher salary by virtue of his service. The special pay may be made Rs. 35 in both the cases, viz., Engineering Instructors and Assistant Engineering Instructors.

*Manual Training Instructors and other Specialist Teachers placed on the Secondary Grade Scale*: These teachers, some of whom had been reduced from the scale of Rs. 60-4-100 to Rs. 50-2-90 during the last few years, deserve sympathetic consideration by the Government and their salaries need liberalisation to the scale of Rs. 125-5-175 plus a special pay.

*Non-Teaching Staff*: The fact that there are already Senior Clerks working on the Upper Division Clerk's scale in big institutions has to be recognised and posts in the Upper Division Clerk's scale at the rate of one for every five hundred of strength of the High School are highly necessary.

## PROCEDURE IN FIXATION

*Weightage (in general)*: The question of weightage decides the full benefit or otherwise of the revised scales. Seniors, though not entitled to point to point weightage, should have the benefit of the four increments (accepted by the Government) for their service of twelve years and over.

Teachers, by the very nature of their appointment, can only be teachers throughout their service and cannot rise up to different promoted positions and posts like the members of the ministerial services. As such, application of the rules for fixation should be interpreted liberally in their case and service for purposes of weightage should be taken to mean the total

service of a teacher in recognized schools. A teacher, under the prevailing *conditions and the conditions of* service that have been in force upto now is liable to have service :—

(i) in different institutions with breaks ;

(ii) under different Agencies with breaks ;

(iii) in different cadres (as Higher and Secondary grade, Secondary grade and B.T. grade, II grade Pandit and I grade Pandit, Secondary Grade Teacher and Pandit, etc.), by virtue of his successful efforts in qualifying himself further ;

(iv) in different scales of salaries as per revision of salaries made from time to time or the scales of salaries adopted by the different institutions he might have served under ; or

(v) in different grades of institutions as Elementary and Secondary School under the same or different Management.

Thus, the teacher has been working under conditions completely different from those prevailing in the ministerial service and his total service is to be taken into account if weightage, as sanctioned by the Government, is to benefit him. Orders from the Government that the total service should be taken for weightage, as is done for purposes of pension, are hence necessary.

*Weightage (with regard to Elementary School Teachers)* : Secondary grade teachers who are in charge of classes I to V of elementary schools, and who have been in service from a date prior to 1-11-1956 need to be given weightage for their total service in accordance with the principle recognized that such pre-1-11-1956 secondary grade teachers should not get affected in their prospects. The recommendations of the Pay Commission as accepted by the Government, do guarantee a minimum rise of rupees *five in the total* emoluments and *this* benefit also must be made clear to the officers in charge of fixation of salaries in the case of these teachers. Now that the grant scale and the salary scale are the same, the fact that weightage should be given on the new grant scale, treating it as a salary scale, needs to be made clear.

*Option* : Orders in respect of teachers under Local Bodies that the increment that fell due on 1-6-1960 should be taken into account before fixation need to be extended to Aided Institutions also, if not extended so far. Even such orders cannot give relief to such of those whose increments fell due after 1-6-1960. Such teachers have to lose the increment due for the previous year's work. This point, as also the anomaly of lower salaries in the revised scale at any *future* point of time, will be solved if the right is given to teachers to opt for the old scale as long as it is advantageous to them. The Union appeals to *the* Government *to* grant this right of option to teachers.

*Benefits (in general)* : The Union, while realising the fact that the recommendations of the Pay Commission as accepted by the Government are there to benefit the teachers over and above what they were paid already in the form of salaries and allowances, requests the Government to make it clear to the Managements that allowances as Duty allowance in the case of Headmasters, Special allowance in the case of II grade Pandits handling 12 periods in Higher Forms, the allowance of Rs. 10 in the case of Secondary grade Physical Training Instructors and other such allowances are to be paid as hitherto ; that the benefits are to be conferred on all teachers who were in service on 1-6-1960 including superannuated teachers and that duty allowances should continue in the case of Headmasters of Municipal elementary schools promoted as Supervisors.

*Benefits (Secondary Grade Teachers in Higher Grade posts)* : Secondary grade teachers working in Higher grade posts on account of the introduction of the scheme of SANCTIONED POSTS are unable to get the Secondary grade scales of salaries as per the revised scale and the full benefits due for their qualification. The Union earnestly requests that orders may kindly be issued treating all posts occupied by Secondary grade teachers as Secondary grade posts.

*Benefits (Aided Elementary School Teachers who were paid direct by the Government for one year from 1-6-1959)* : Aided elementary school teachers who came under direct payment by the Government for a year got their salaries reduced as per a Government scale introduced before such payment. The salaries as per Service Register need to be taken into account for purposes of fixation to enable these teachers to get the full benefits of the recommendations of the Pay Commission.

## GENERAL

The Union appeals to the Government to issue favourable orders on the above points and also recognize the claim of teachers for PARITY with regard to HOUSE-RENT ALLOWANCE, MEDICAL CONCESSIONS, TEMPORARY INCREASE IN PENSIONS, QUARTER-PENSION FOR B.T. GRADE TEACHERS and PENSION TO THE NON-TEACHING STAFF (inclusive of inferior servants) in non-Government institutions.

SECRETARY.

---

# செய்தித் திரட்டு

**ஈ.ஆர். இந்து ஆரம்பப் பாடசாலை, திருச்சி**

10-1-1961 மாலை இப்பாடசாலையின் திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி எட்டாவது ஆண்டு மாநட்டின் பூர்வாங்கமாக மாணவர்கள் மனனம் செய்துள்ள பாவைப்பாடல்களை சென்னை கலைமகள் ஆசிரியர் உயர் திரு. கி. வா. ஜகந்நாதன் M. A., B. O. L., அவர்கள் பரீக்ஷித்துப் பார்த்தார். பின்பு பாவைப் பாடல்களின் பெருமையையும் அவற்றைப் படிப்பதன் அவசியத்தையும் பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறி சிறார்களை வாழ்த்தி நல்லாசி கூறினார்.

தலைமை ஆசிரியர் திரு. S. சங்கரய்யர் வரவேற்றுரை நிகழ்த்தினார். ஆசிரியர் திரு. K. S. நடராஜன் நன்றி கூற, தேசீய கீதத்துடன் விழா இனிது முடிந்தது. பள்ளி மானேஜர் உயர்திரு. R. நடராஜய்யர் அவர்களும், பள்ளி மேற்பார்வையாளர் திரு. N. சதாசிவம், B. A., L. T. அவர்களும் நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

**Regd. No. M. 3473**
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

# “வாழ்த்துமின்”

(ஆ. வேலுமணி)

1. கலைதரும் மலைதனிலே கையகல வழிபோல,
அலையெழுப்பு பூம்புனலே அருவியாக விழுந்ததுவே,
கொலையாக்கி பலஇடத்தில் குதித்தோடி வந்ததுவே,
சாலைவழி செல்வதுபோல் மேவியே நடந்தாயே.

2. கல்லூடே உட்புகுந்து நெறிமணலை தூவிவிட்டு
அல்லுபகல் பார்க்காது அயர்வுமிகக் கொள்ளாது,
மல்ப்போர் பலசெய்து மகத்தான வெற்றிகண்டு
நெல்விளை பொன்னாட்டில் நிமிர்ந்து வழிநடந்தாய்.

3. மான்துள்ளு காடதனை மாற்றுதற்கு வழிகண்டு,
தேன்பொழி வீடாகத் திருப்பிவழி செய்திட்டு,
மேன்மக்கள் தம்முடனே மிகையாகத் தொடர்புற்று,
ஊண்தரும் உழவருக்கு ஊக்கத்தைக் கொடுத்தாயே.

4. ஓடிஎங்கும் வருகின்றாள் உலகத்தின் வழிகாட்டி,
பாடியவள் புகழைப் பாவலர்கள் வாழ்த்தவே,
நாடியவள் பதத்தை நல்லோர் வழிபட்டால்,
கோடிநன்மை எனநினைந்து கொண்டாடி வருகின்றோம்.

5. மேழிபிடி கைகளுக்கு மேன்மை கொண்டவளாய்,
ஊழிக்காலத்து உணர்வு கொண்டு உணவுதந்து,
ஒழியாதோடி உழவருக்கு உழைப்பதனை கொடுப்பவளை,
வாழியெனும் இசைபாடி வாழ்த்துமின்! வாழ்த்துமின்!!

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. and Published by Sri S. D. Krishnamurthi Rao, B.A., L.T., for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.